# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆர்.விக்னேஷ்வரன் | Calling | : |
| Father/Husband's Name | : ராஜேந்திரன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 14th October 2025.

1ம் எதிரி ஆஜரில் உள்ளார். 2ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது ஈரோடு 46 புதூரில் வசித்து வருகிறேன். நான் மின்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். 17.03.2022 அன்று நான் வீட்டில் பணியில் இருந்தபோது என் அம்மா கோவிலுக்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார். பௌர்ணமி பூஜைக்காக அன்றும் வழக்கமாக கிளம்பி சென்றார். பின்னிட்டு மாலை 4.00 மணியளவில் என் அம்மா எனக்கு போன் செய்து செயினை பறித்து விட்டதாகவும், என்னை உடனே தீரன் நகர் சாய்பாபா கோவிலுக்கு அழைத்தார். நான் கோவிலுக்கு சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்தது. பைக்கில் வந்த 2 நபர்களில் ஒருவர் செயினை பறித்து விட்டு அதை பற்றி சொன்னால் கொன்றுவிடுவதாக மிரட்டல் விடுத்ததாகவும், என் அம்மா அழுது கொண்டே சொன்னார்.

2. மேலும், எனது செயினை பறித்தவர்கள் நால்ரோடு வழியாக தப்பி சென்றுவிட்டதாக சொன்னார்கள். இதுசம்பந்தமாக மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் செய்தேன். 29.03.2022 அன்று மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து என் அம்மாவிடம் நகை பறித்த நபரை பிடித்துவிட்டதாகவும், செயினையும் கைப்பற்றியுள்ளதாகவும், வந்து அடையாளம்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.14 17:36:30 +0530

காட்டுமாறும் சொன்னார்கள். நானும், என் அம்மாவும் காவல்நிலையம் சென்று செயினை நானும், எனன் அம்மாவும் அடையாளம் காட்டினோம். என் அம்மா நகையை பறித்தவரை அடையாளம் காட்டினார். பின்பு செயினை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பொறுப்பில் பெற்றுக்கொண்டோம்.

3. செப்டம்பர் 20, 2022 அன்று செயினை பறித்த நபரை அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள். என் அம்மா சென்று அடையாளம் காட்டினார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.14 17:36:36 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வமணி | Calling | : |
| Father/Husband's Name | : ராஜேந்திரன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 14th October 2025.

1ம் எதிரி ஆஜரில் உள்ளார். 2ம் எதிரி ஆஜரில் இல்லை. 2ம் எதிரி ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது 46 புதூரில் வசித்து கொண்டு வருகிறேன். ரேசன் கடையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். தீரன் நகரில் உள்ள சாய்பாபா கோவிலில் பௌர்ணமி பூஜை நடப்பதுவழக்கம். ஒவ்வொரு பௌர்ணமிக்கும் நான் செல்வது வழக்கம். நான் 17.03.2022 பௌர்ணமி அன்று மதியம் 3.30 மணிக்கு என் வீட்டில் இருந்து நடந்து தீரன் நகர் சாய்பாபா கோவில் அருகே வந்தபோது தீரன் நகர் வளைவு ரோட்டில் டியோ வண்டியை நிறுத்தி கொண்டு 2 நபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

2. நான் அதை பார்த்துவிட்டு நகர்ந்து சென்றேன். மேற்படி 2 நபரில் ஒருவர் பைக்கை ஸ்டாட் செய்து நிறுத்தி இருந்தார். அந்த பைக்கை ஓட்டிய நகர் கருப்பு கலர் டீ.சர்ட் அணிந்து இருந்தார். பச்சை கலர் டீ.சர்ட் அணிந்து வந்தவர் என் பின்னால் வந்து என் கழுத்தில் இருந்த ரட்டவடை செயின் சுமார் 5 பவுன் எடையுள்ள தங்க செயினை பறித்து கொண்டு சத்தம் போட்டால் குத்தி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டல் விடுத்துவிட்டு ஸ்டாட் செய்து நிறுத்தி இருந்த டியோ வண்டியில் ஏறி அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் சத்தம் போட்டேன், அக்கம் பக்கம் யாரும் இல்லை. சுமார் 5 நிமிடம் கழித்து

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.14 17:36:44 +0530

குழந்தையை அழைத்து கொண்டு வந்து கொண்டிருந்தார். அவரிடம் சொல்லி நால்ரோடு சென்று பார்த்தபோது அங்கே யாரும் இல்லை.

3. பின்பு நான் சாய்பாபா கோவிலுக்கு போனேன். அங்கிருந்தவர்கள் போலீசில் புகார் கொடுக்குமாறு சொன்னதால் என் மகனிடம் தகவல் சொல்லி அன்று மாலை மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 29.03.2022 அன்று மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் இருந்து என் மகனுக்கு போன் செய்து என்னிடம் திருடிய செயின் கண்டுபிடித்து விட்டதாகவும், அதை வந்து அடையாளம் காட்டுமாறும் போலீஸார் சொன்னார்கள். மொடக்குறிச்சி காவல் நிலையத்திற்கு நானும், எனது மகனும் சுமார் 11.30 மணி வாக்கில் சென்றோம்.

4. பின்பு அங்கு என்னுடைய செயினை அடையாளம் காட்டி உறுதிபடுத்தினேன். பின்பு போலீஸார் என் செயினை பறித்த நபரை பிடித்து வைத்திருப்பதாக கூறி என்னிடம் காண்பித்தார்கள். அப்பொழுது காவல் நிலையத்தில் இருந்த அந்த நபர் என்னிடம் பச்சை கலர் பனியன் அணிந்தவர் செயினை பறித்தபோது கருப்பு கலர் பனியனுடன் பைக்கில் ஸ்டாட் செய்து நின்றிருந்த நபர் அங்கு இருந்தார். அவரை நான் அடையாளம் காட்டினேன். என்னிடம் நகை பறித்த மற்றொரு நபர் அங்கு இல்லை. பின்பு சிறிது நாட்கள் கழித்து என்னிடம் செயினை பறித்த நபரை பிடித்துவிட்டதாக சொல்லி அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள். நான் 20.09.2022 அன்று மொடக்குறிச்சி காவல்நிலையம் சென்று என்னிடம் நகை பறித்தவரை அடையாளம் காட்டினேன். பின்பு போலீஸார் என்னுடைய நகையை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பொற்றுகொள்ளுமாறு கூறியதால் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகையை எனது இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன்.

5. என்னிடம் காட்டப்படும் புகைப்படுத்தில் உள்ள நகை தான் என் கழுத்தில் இருந்து எதிரி பறித்ததாகும். அதை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக்கொண்டேன். **அந்த புகைப்படத்தில் உள்ள நகை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இன்று நீதிமன்றத்தில் உள்ள ஆஜர்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.14 17:36:51 +0530

எதிரி என்னிடம் நகை பறித்தபோது பைக்கை ஓட்டி சென்ற நபர் ஆவார். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.14 17:36:57 +0530